சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 113/2017

**PW 1 - சுகந்தி** **01.04.2026**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் இரண்டாம்வாதி என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாயார் 1 ம்வாதி என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் கண்ட 1 ம்பிரதிவாதி, 6, 7 பிரதிவாதிகள் எனது தந்தை வேலுச்சாமி கவுண்டர் ஆகியோர் வீரப்ப கவுண்டரின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். 1976 ம் வருடத்தில் என் தந்தை வேலுச்சாமி கவுண்டர் எனது தாயாரையும் என்னையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். வீரப்ப கவுண்டருக்கு 02.03.1953 ம் தேதியிட்ட பாகபத்திரப்படியும், 12.06.1957 ம் தேதியிட்ட கிரய படியும் கிடைத்த சொத்தை அபிவிருத்தி செய்துஆண்டு அனுபவித்து வந்த சொத்துதான் தாவா சொத்து என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை 1, 6 மற்றும் 7 ம் பிரதிவாதிகளும், வாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்று சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கும் என் தாயாருக்கும் தாவாசொத்துக்களில் கூட்டாக 4 ல் 1 பங்கு பாத்தியப்பட்டு பொதுவில் கூட்டு சுவாதீன அனுபவித்தில் இருந்து வருகிறது என்று சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் எப்போதும் தாவாசொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நானும் எனது தாயாரும் பிரதிவாதிகளை பலமுறை நேரிலும், பொதுமனிதர்கள் மூலம் அணுகி பாகம்பிரிக்க சொல்லி கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு என்றுசொன்னால் அது சரியல்ல. 6, 7 பிரதிவாதிகள் அவர்களுக்குண்டான பங்கு பாத்தியத்தை 31.01.2017 ம் தேதியில் ஆவண எண் 613/2017 என்ற ஆவணம் மூலமாக

அவர்களுக்கு உண்டான பாத்தியத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட ஆவணமானது குறைந்த மதிப்பீடு செய்து விடுதலை செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் அதில் செக்குபந்திகளும் அளவுகளும் சரியாக குறிப்பிடவில்லை என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. க.ச.எண்.556/8 ல் உள்ள தடத்தில் 1ம் பிரதிவாதி அவருடைய சொந்த செலவில் ஆழ்துழாய் கிணறு அதில் வைக்கபபட்டுள்ள 1 HP மோட்டாரிலும் எங்களுக்கு எவ்வித பாத்தியமோ பங்கோ இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. 6,7 பிரதிவாதிகளுக்கு பணம்கொடுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கியது எனக்கும் என் தாயாருக்கும் தெரியும் என்று சொன்னால் பொது மனிதர்களை வைத்து பாகம் கொடுக்க பைசல் பேசினோம், கொடுக்கவில்லை பின்னர் நாங்கள் வழக்கறிஞரை சந்தித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப ஆவணங்களை எடுத்துபார்த்தபோதுதான் தெரியும். எப்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று கேட்டால் 2017 ல் அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்று சொன்னால் அது சரிதான். அந்த பதில் அறிவிப்பில் 14.12.2003 ம் வருடத்தில் 1ம் பிரதிவாதியும் நானும் தாவாசொத்தை பொறுத்து 2 பாகங்களாக பிரித்து ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திகொண்டோம் என்று பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. பாக உடன்படிக்கைபடிதான் ஏ செட்யூல் சொத்தை 1ம் பிரதிவாதியும் பி செட்யூல் சொத்தை நானும் எனது தாயாரும சுவாதீனம் எடுத்து தனித்தனியாக பாத்தியம் அடைந்துகொள்ளவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல, நாங்கள் தாவாசொத்தை பொதுவாகத்தான் அனுபவம் செய்து வந்தோம்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி